**தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் - 2014**

---

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1 ஆம் பொதிக்கான பீஎல்ஏ 201011 ஆம் இலக்கம் மற்றும் 2 ஆம் பொதிக்கான பீஎல்ஏ 201012 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சும் தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் கட்டுப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை முதலாவது நுழைவிற்கு நுழைவு வீதிகளை இணைப்பதன் மூலம் கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை, மீன்பிடிகள் மற்றும் விவசாயம் என்பவற்றில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதன் மூலம் தென் மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் படி, கொட்டவை முதல் கொடகம வரையான 126 கிலோமீற்றராக உள்ள செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 661.14 மில்லியனானதுடன் அதில், பின்னடுவ முதல் கொடகம வரையான நெடுஞ்சாலையின் 30.25 கிலோ மீற்றர்களை நிர்மாணிப்பதற்கு சீனா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியால் ஐ.அ.டொலர் 138.21 மில்லியன் அல்லது 20.9 சதவீதம் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. தென்பகுதி நெடுஞ்சாலையின் நிர்மாணத்திற்கான ஒட்டுமொத்த வளங்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கடனளிக்கும் முகவர்** | **உடன்பட்ட தொகை** | **சதவீதம்** |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | (%) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 186.00 | 28.13 |
| சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி | 103.00 | 15.58 |
| நோர்டிக் அபிவிருத்தி நிதியம் | 5.40 | 0.82 |
| சுவீடிஸ் சர்வதேச அபிவிருத்தி சங்கம் | 0.80 | 0.12 |
| சீனா எக்ஸ்சிம் வங்கி | 138.21 | 20.90 |
| இலங்கை அரசாங்கம் | 227.73 | 34.45 |
| மொத்தம் | 661.14 | 100.00 |

95.05 கிமீ நீளமான கொட்டாவையிலிருந்து பின்னடுவ வரையான அதிவேக வீதிப் பிரிவு மற்றும் 5 கிலோ மீற்றர்கள் காலித் துறைமுக நுழைவு அணுகும் வீதி என்பன

பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் 27 இல் பூர்த்தியாக்கப்பட்டு போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டது. மாத்தறையில் பின்னடுவை முதல் கொடகம வரையான அதிவேக நெடுஞ்சாலையின் மீதிப் பகுதி 2014 மார்ச் 16 இல் போக்குவரத்திற்காக திறப்பட்டடிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தென்பகுதி நெடுஞ்சாலைக்கு நேரடியாக மற்றும் மறைமுகமான இணைப்புக்களில் வேறு 06 உள்ளுர் வீதிகளை புனரமைப்பதற்கு அதிவேக நெடுஞ்சாலையின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 4,842 மில்லியன் தொகையான சேமிப்புக்களை பயன்படுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. பின்னடுவை முதல் கொடகம வரையான அதிவேக நெடுஞ்சாலை பிரிவு நிர்மாணித்தல் மற்றும் வேறு 06 வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளை இந்த அறிக்கை உள்ளடக்குகிறது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

-------------------------

### 2.1. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை

இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

செயற்திட்டமானது 02 உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து நெடுஞ்சாலையின் முடிவில் ''நில்வல கேற்'' நினைவுச் சின்ன பொறிபனவுகளின் உலோகங்களின் வரையறுத்த கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 4,510,000 கிரயத்தில் ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.13.4 ஆம் பிரிவின் பிரகாரம், மூல ஒப்பந்த தொகையின் 64 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,891,337 கிரயத்தில் செய்யப்பட்ட மேலதிகமான வேலைகளிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான பின்னடுவ முதல் கொடகம வரையான அதிவேக பிரிவு மற்றும் 06 வீதிகள் என்பன தொடர்பான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போதான | 2014 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீன எக்சீம் வங்கி | 138.21 | 15,895.00 | 3,100.00 | 1,994.00 | 10,617.00 |
| * இலங்கை அரசாங்கம் | - | 2,805.00 | 200.30 | 200.30 | 3,241.00 |
| மொத்தம் | 138.21 | 18,700.00 | 3,300.30 | 2,194.30 | 13,858.00 |

* உள்நாட்டு வங்கியொன்றிடமிருந்து பெறப்பட்ட கடனில் செயற்திட்டத்தின் செலவினைச் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் செலவழித்த ரூபா 87.65 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பில் உள்ளடக்குகிறது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென் மாகாணத்தில் மேற்குறிப்பிடப்பட்ட 06 வீதிகளின் புனரமைப்பிற்கான ஒப்பந்தம் ஒரே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்தகைய வீதிகளின் புனரமைப்புக்களின் பௌதீக முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன.

| வீதிகள் | நீளம் கிலோ மீற்றர்கள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| | | % |
| ஐக்கமுல்ல- இமடுவ வீதி | 6.2 | 99 |
| டொரபே- ஹியாரி வீதி | 8.7 | 87 |
| கொடகம – தெலியவில வீதி | 4.5 | 68 |
| வெலிகம்- கனன்கே வீதி | 9.6 | 66 |
| அஹன்கம - இமடுவ வீதி | 10.0 | 65 |
| வெலிகம - தெலிஜவில வீதி | 7.7 | 31 |

(ஆ) பிரதான பதவியணியினரின் பொறுப்புக்களை தெளிவாக இனங்காண வேண்டிய விரிவான ஒட்டுமொத்த திட்டத்தின் அடிப்படையில் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டி இருந்ததுடன் 06 வீதிகளின் புனரமைப்பிற்காக செயற்திட்டத்தால் அடையப்பட வேண்டிய நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூல அளவீட்டுப் பட்டியலில் செய்யப்பட்ட தவறான மதிப்பீடு காரணமாக பின்னடுவ முதல் கோடகம வரையான அதிவேகப் பாதைப் பிரிவின் ரூபா 18,700 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட நிர்மாணக் கிரயம் ரூபா 15,470 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவற்றில் ஏற்பட்ட உள்ளபடியான கிரயம் ரூபா 13,858 மில்லியனாகும். ஆகவே, மேற்குறிப்பிட்ட 06 வீதிகளின் புனரமைப்பதற்கு ரூபா 4,842 மில்லியன் மொத்த சேமிப்புக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பரீட்சிப்பு அறிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட வீதிகளின் மண் மட்டப்படுத்தலின் தவறுகள் டொறபே- ஹியரே வீதியில் 49 சந்தர்ப்பங்கிலும் வெலிகம்- கனன்கே வீதியியில் 45 சந்தர்ப்பங்களிலும் உள்ள குறிப்பிடத்தக்க தவறுகள் உள்ளடங்கலாக 169 சந்தர்ப்பங்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) புனரமைக்கப்பட்ட வீதிகளின் கோடு தாரிடலின் தடிப்பு மாதிரி பரீட்சிப்பு 98 சதவீதம் மட்டப்படுத்தலின் முடிவில் எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவாக ஏற்கனவே சகல மட்டப்படுத்தில் காலத்திலும் விளைந்திருந்த போதிலும், அத்தகைய தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட அதிவேகப்பாதையின் வீதியின் முடிவில் ‘‘நில்வல கேற்’’ நினைவுச் சின்னம் பதிக்கப்பட்டு பொருத்துவதற்கான ஒப்பந்தம் 3 வாரங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், பொருத்துதல் வேலைகள் 08 வாரங்களின் பின்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரிடமிருந்து தாமதக் கட்டணமாக ரூபா 825,000 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது. பின்னர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நினைவுச் சின்னம் வடிவமைப்பாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தாமதக் கட்டணங்களை பதிவழித்திருந்தார்.

**3.5 புறம்பான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்னடுவ முதல் பொடகம வரையான வீதிப் பிரிவின் திறப்பு விழாவிற்காக செயற்திட்டத்தால் ரூபா 84.74 மில்லியன் செலவழித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.6 பயன்படுத்தப்படாத/ குறைவாகப்பயன்படுத்திய சொத்துக்கள்**

மாத்தறையில் ‘‘நில்வல கேற்’’ இல் பொருத்த வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டு ரூபா 4.19 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 02 முதலை வடிகட்டமைப்புகள் உடுகவவில் செயற்திட்ட அலுவலகத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்தது என களப் பரிசோதனையில் வெளிப்பட்டது.